# பத்ரி

## உரையாடல்!

## தை வருடப் பிறப்பு!

## ஜனவரி, ௨௦௧௦

## இதழ் ௬





பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# பக்தி உரையாடல்!

## தை வருஷப் பிறப்பு!


ஜனவரி, 2010

இதழ் 6

# பொருளடக்கம்


1. பகவான் குரு பற்றிய விளக்கங்கள்--------------------------------251
2. பக்தி, யோக, ஞானசாதனைகளுக்கு வினை & விதி உண்டா?266
3. ஸ்வய ஞானாநுபவ பாடல்களுக்கு விளக்கம்----------------------274
4. ஜீவநிலை, ஈசநிலை, பரநிலை-------------------------------------305


எல்லாம் நீ!



(3) பேதம் (251)

விருப்பு & வெறுப்பு

இல்லாமை, எதையும்

நவமே என உள்ளல்.

(4) சர்வார்ப்பணம் பரிபூரணமான தேவி.

ஒர் ஸ்ரீ மஹாத்மா! தம் குகைக்கு அழைத்துச் சென்றார். அங்கு சில மஹாத்மாக்கள், அந்த குகையில் தியானத்திற்காகவே, காத்திருந்தனர் போலும்? அங்கு அழைத்துச் சென்று, ஸ்ரீ மஹாத்மா! சில கேள்விகளை கேட்டார். அக்கேள்வியாவது?


கேள்வி :- (A) ஓஎம் அருமை மாமாஜீ! குரு! பக்தி வேறு? ஸ்ரீ பகவான் பக்தி வேறு?

(B) குருவால் தான், ஸ்ரீ பகவானை காட்ட முடியுமா? அல்லது ஸ்ரீ பகவான் தான், ஓர் குருவை காட்டுவாரா?

(C) ஸ்ரீ பகவானை கண்டால், ஆத்ம ஞானம் பெற மார்க்கம் உண்டா? அல்லது ஸ்ரீ குருவைக் கண்ட பிறகு தான், ஆத்மஞானம் கிட்டுமா?

(D) ஸ்ரீ பகவானை விட, சிறந்தவர் குரு என, சொல்லும் காரணம் என்ன? அவர் ஸ்ரீ பகவானின் சகாயம் இல்லாமல், ஜீவன் முக்தி பெற முடியாது, எனச் சொல்லும் உட்கருத்து என்ன?

(E) ஸ்ரீ பகவானையும்! ஸ்ரீ குருவையும்! ஒன்றாக உணரும் நிலை பெறுவது எதனால், அதன் சாதகத்தை என்ன? (இவைதான் அங்கு கேட்கப்பட்ட கேள்விகளாகும்)




(5) அனைத்து ஜீவ (252)
வேஷங்களிலும்
ஸ்ரீபகவானே!
அவரவர் புண்ணிய
பாபங்களை ஒழுங்காக
ஏற்று, பாரபக்ஷம் இல்
லாமல் நடிக்கிறேன் என்ற உணர்வு
நிலையில்.

கேள்வி:- குருபக்தி வேறு. ஸ்ரீபகவான் பக்தி வேறா?

பதில்:- அவசியம் வேறு வேறு தான்.

குருபக்தி ஜீவன் முக்தியை! கொடுக்கும். ஸ்ரீபகவான் பக்தியோ பதமுக்தியை! கொடுக்கும். குருபக்தியானது அறியாமையான இருளை போக்கும். ஸ்ரீபகவான் பக்தியோ, ஜகத்தில் வாழ வழிவகுத்துக் கொடுக்கும். குருவோ, நாமரூப ஜகத்தின், நிலையாமையை, காட்டுவார். ஸ்ரீபகவானோ, நாமரூப ஜகத்தில் அனைவோருமசி உன்னையாம், ரக்ஷிப்போம் என்பான். ஆனால் ஜகம் நிலையில்லாதது என, சொல்லமாட்டான். சொல்லக்கூடாது. சொல்ல முடியாது. காரணம்? ஜகம் ஸ்ரீபகவானின் மாயா சிருஷ்டியாகும். தாமே சிருஷ்டித்த பொருளை, தாமே நிலையில்லாதது என சொன்னால்? அது ஸ்ரீபகவானுக்கு பொருந்தாது. வியாபாரி ஒருவன் தன் பொருளை, அசுத்தம் [illegible] என்றோ, இது உதவாதது என்றோ, குறை சொன்னால் எப்படி அப்பொருள், விற்பனை ஆகாதோ, அவ்வாறே ஸ்ரீபகவானும் தன் பொருளை குறை கூறவாகாது.



தெய்வம் (253)

மனுஷ்யனும்/என்பதை, வாய் ஞானம்
இல்லாமல் அனுபவ
ஞானமாக உணர்ந்தால். தெய்வத்தன்மை
பெறலாம்.

ஆனால் ஸ்ரீபகவான்! என்ன கூறுகிறான் என்றால்?
உன் குருகாட்டும், பாதையில் சென்றால், எம்முடைய
நாமரூப ஜகம்! உன் முன் தோன்றும். என்னும்,
எம் வழியால் நீவந்தால், எம் நாமாவை சொல்லி,
விளையாடு ஆனால் உடைமை & உரிமை பாராட்டாதே
அப்படி பாராட்டினால்,
அது உனக்கு துன்பத்தை கொடுக்கும் என்பான்.
குரு என்ன கூறுகிறார் என்றால்?
நீயே ஸ்ரீபகவானாக இருக்கும் போது, இந்த நாமரூப
திருஷ்டி உன்னுடையது தானே? உன் திருஷ்டியால்
உனக்கு மோஹம் ஏன்? விளையாடியது போதும்.
என ஓர் நிறைவைக் கொடுத்து.

# தத், த்வம், அஸி

|யை உணர்த்த,
தத்பத ஸ்ரீபகவானும் நீயே! த்வம்பத ஜீவனும் நீயே!!
மண்ணான திருஷ்டி உன்னுடையதே! அம்மண்ணை,
அமிர்தமாகிய, பரசொரூபமாகிய மண்ணை ஆக்கி,
எல்லாம் மண்ணே! என சத்தியத்தை உரைத்து,




ஸ்ரீகுரு காரியத்தை ஸ்ரீபகவான் செய்யமாட்டான். செய்ய முடியாது. செய்ய இயலாது. குருகாரியமானது ஜீவ அழிப்பு ஆகும். ஆகவே அதை ஸ்ரீபகவான் செய்யான் என உணர்.

நாமரூபத்தை தெருத்து, அழிபதமாகிய பர சொரூபமாகிய நம்மோடு ஒன்றாக வந்து அதுவாகவே, நம்மை ஆக்கி விடுவதால்; குரு பக்தி வேறுதான்! ஸ்ரீபகவான் பக்தி வேறுதான்!

Ⓑ கேள்வி :- குருவால்தான், ஸ்ரீபகவானை காண முடியுமா? அல்லது ஸ்ரீபகவான்தான், ஓர் குருவை காட்டுவாரா?

பதில் :- இது ஓர் சிக்கலான கேள்விதான்? ஆனாலும் கவனம் தேவை. குருவால்தான், ஸ்ரீபகவானை காண முடியுமா? என்றால் இது சாமான்ய குருவுக்கும் பொருந்தும் என உணர வேண்டும். இது ஸ்ரீமாதா! ஸ்ரீ பிதா! ஸ்ரீ குரு! ஸ்ரீதெய்வம்! என்ற, வரிசைக் கிரமத்தில், குரு மூன்றாம் இடமும் தெய்வம் நான்காம் இடமும் பெறுகிறது. ஆகவே குருகிருபை பெற்றால்தான்! அவருடைய வழிகாட்டுதலால்தான், தெய்வத்தை நாடவும்! தேடவும்! தரிசிக்கவும்! முடியும் என்பது சத்தியமே.



ஸ்ரீ பகவான் காரியம்
குரு செய்ய (255)
மாட்டார். செய்ய
இயலாது. செய்ய
கூடாது. காரணம்?
ஸ்ரீ பகவான் காரியம்
ஜீவ ரக்ஷிப்பு ஆகும்.
நாம ரூபங்களை இல்லை யென சர்வநாசம்
செய்பவரே, ஸத்குருவாகும்

உன்னுடைய, பல கோடி ஜன்மாவில் நீ செய்த,
பலன் கருதா கர்மத்தால்! மட்டும்!
தனது மனமுயற்சி! தோன்றும்.
உன் மனமுயற்சி: நான் அற்ற நாம்!
ஆனதன்மையால்,

ஸ்ரீ மாதா! ஸ்ரீ பிதா! ஸ்ரீ குரு! ஸ்ரீ தெய்வம்! ஸ்ரீ ஸத்குரு!
ஸ்ரீ பரம்! என்ற அறிவும், தெய்வம் நான்காம்
இடமும். ஸ்ரீ ஸத்குரு ஐந்தாம் இடமும் பெறுவதால்,
உன் பரிபூரண நம்பிக்கையால், ஆறாவது காரணம் அது நீ நம்பிக்கையால்
ஸ்ரீ பகவான் கிருபை! பரிபூரணமாக பெற்றுவிட்டாய்.
ஆகவே, உன் ஸ்ரீ உபாசனை மூர்த்தியே!

# ஸ்ரீ ஸத்குருவாய் வரும்!


அல்லது **ஸத்குருவை காட்டும்!!**

இது ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!



முன்பே ஸ்ரீபகவானின் கிருபையை,
தர்ஸனத்திலோ!
கருணையிலோ! 256
பெற்று விட்டான் என்றால்
இனி ஒரு தர்ஸனமோ
கருணையோ
பெறத் தேவையில்லையெனத்
தெளிவாகிறது. இது இருவருக்கும் பொருந்தும்.

குறிப்பு :- இங்கு நான்கும்! ஐந்தும்!
ஸ்ரீபகவானும்! ஸ்ரீ ஸத்குருவும் மு றை ப் ப டி
செயல்படுவதால், ஸ்ரீபகவானின் கிருபையை முன்பே
தர்ஸனத்திலோ! அல்லது
கருணையிலோ! பெற்று விட்டான்
இறைபேர! கருணையை பெற்று விட்டான்
ஆ (தர்ஸனம் = இறை) க (கருணை = பரம்) வே
உன் ஸ்ரீபகவானே! ஓர் ஸத்குருவாய் வரும்.
அ ல் ல து!
,, ,, ஓர் ஸத்குருவை காட்டும்.




ஸ்ரீபகவானின் (257)
காட்சி பெற்ற
பிறகே, கருணை பெற
முடியும் என்பது,
சாஸ்திர
சம்பிரதாயமாகும்.
ஸ்ரீபகவான் காட்சி பெருமைவேயே,

குரு ஸ்ரீபகவானை காட்டுவது என்றால், இது
சாமான்ய குருவுக்கும் பொருந்தும்.
ஸ்ரீபகவான் தான் ஓர் ஸத்குருவை காட்டுவார் என்றவி
தனது மனமுயற்சி / உள்ளவர்களுக்கே,
பொருந்தும். ஜெயோகேடு பொருந்தாது

கேள்வி:- ஸ்ரீபகவானை கண்டால் தான், ஆத்ம ஞானம்
பெறவாய்ப்பு உண்டா? அல்லது ஸ்ரீ ஸத்குருவை
கண்டிருக்குதான், ஆத்ம ஞானம் கிட்டுமா?

பதில்:- ஆத்ம ஞானம் என்பது, நாமரூப குணங்களை
கடந்த ஒன்றாகும். ஆகவே, ஸ்ரீபகவானையே ஓர்
சூட்சும நாமரூபம் / உடையவனே. ஆகவே ஸ்ரீபகவானை
கண்டால் மட்டும் சாத்தியமாகாது. அறிவீ
அவன் கருணை பெறவில்லையானாலும், ஆத்ம
ஞானம்



சிரத்தை = சிரவணம்.
நம்பிக்கை = மனனம்.
வைராக்கியம் = நிதித்யாசம்.

ஸ்ரீபகவானின் **கருணை**/ உதவி

பெறுவது என்பது
த ன து ம ன
மு ய ற் சி
யின் அனுபவ உணர்வு
அப்படியானால் ஸ்ரீபகவான்
நிலையாகும். கருணையை பெறலாம்
காட்சி/ பெருமையே, என உணரவும்.

சாத்தியமாகாது என உணர வேண்டும்.
ஓர் உண்மை.

ஸ்ரீபகவான் தரிசனம் என்பது, ஓர் காட்சியே.
" கருணை " நோவடி குணமா
கிற, யோகம் ஓர், ஔஷதம் ஆகும். ஆகவே
காட்சி முக்கியமில்லை. கருணையே முக்கியமாகும்.
ஸ்ரீபகவான் காட்சிக்காக, அசூபவன் பக்தன் ஆகிறான்
" கருணைக்காக " ஞானி ஆகிறான்
இங்கு அசூகையின் உருக்கம்! ஏக்கம்/ கண்ணீர்
பெருக்கமே/ முக்கிய இடம் பெறுகிறது.

**காட்சிக்கு விண்ணவிதி**/ வேண்டும்.
**கருணைக்கு மனம்**/ உருக்கமே முக்கியமாகும்.



உன் **கண்ணீர்!** உன் மனதை! மென்மை ஆக்கும். உன் வினை கழுவி! கழுவி! கழுவி! **துடைத்து!** இல்லாமல் செய்துவிடும்.

259

ஸ்ரீபகவான் காட்சி பெறுமளவேயே, அவன் **கருணையை!** பெற்று விட்டால், அக் " யின் பயனை, சர்வார்த்த ஸித்தியே!

**வினை&மனம்!** இரண்டையும்! நம் இயல்பாக ஆக்க முடியும். அதனால், ஸ்ரீபகவானே! ஓர் ஸத்குருவாய் வருவார். அல்லது, ஸ்ரீபகவானே! ஓர் ஸத்குருவை காட்டுவார். ஆகவே, ஸ்ரீ ஸத்குருவை **கண்ட** பிறகுதான் ஆத்மஞானமே கிட்டும்.

குறிப்பு :- ஸ்ரீ ஸத்குரு அருளும் அனுபவ ஞான வாசகங்களை, படிப்பதனாலும் & கேட்பதனாலும்!

**சிரத்தை!** உண்டாகும். அச்சிரத்தையினால்,

**நம்பிக்கை!** உண்டாகும். அந்த நம்பிக்கையில்



ஸ்ரீபகவான் பரமசிவ என சொல்வதின் உட்பொருள்:- ஸ்ரீபகவான் மாயாவை உடைய தன்மையா வாசகம்

# அமுதாம்! (260)

உன்னை பெறவல்ல என்றால்
ஸ்ரீபகவானின் கருணையை
பெறவாம் என கொள்ளவும்
அதனால் ஹிருதய மனம்!
பக்குவத்தால், அனுபாகவே ஆகவாம் என உணர்க.

# வைராக்கியம்! உண்டாகும்.

அந்த வைராக்கியத்தினால், ஜீவன் முக்தனவாய்.
ஆகவே, ஸ்ரீபகவானை கண்டால் மட்டுமே ஜீவன் முக்தி இல்லை
ஸ்ரீஸத்குருவை கண்டு ஞானானுபவத்தை அனுபவித்த பின்தான், ஜீவன் முக்தி உண்டு.

(D) கேள்வி:- ஸ்ரீபகவானைவிட சிறந்தவர், குரு என சொல்லும் காரணம் என்ன? ஆனால் ஸ்ரீபகவான்! சகாயம் இல்லாமல், ஜீவன் முக்தி! பெற முடியாது, என சொல்லும் உட்கருத்து என்ன?

பதில்:- முன்பே பலமடல்களில், கூறியுள்ளோம் ஸ்ரீபகவானின் காரியம், ஜீவ ரக்ஷிப்பு! என்றும், ஸ்ரீஸத்குருவின் ,, ஜீவ அழிப்பு! என்றும், சொன்னதை, மனதில் பதிய வைக்க வேண்டும்.

(A) நாமரூப, ஐக ஜீவ, கோத்ர ஆணைக்கும்! சொர்க்காதி பதிய, பதமுக்தியான் ,, !

பர! அம்பலமான பிரம்மம் ஸ்ரீபகவான் இடம் பெறுகிறார் என உணர்க.
(ஸ்ரீபகவான் மாயாவை பற்றிய, நாயேபிட்டேன் பரம் அறிவு)



ஸ்ரீபரமே! ஸ்ரீபகவானாக
வந்து நம் மாயா (261)
விலைப், ஜகசிருஷ்டி
செய்கிறார். நம் அம்ச
ஆன்மாவை! போதும்
என்ற நிறைவோடு இருப்ப
வரை அனுபவம் தாமே
இறை குரு கருணையால், கைகொடுத்தே தீரும்.

(B) நாமரூப, ஜக ஜீவ, ஈஸ்வராதிகளின்!
எந்த தோற்றமும் அற்ற! லௌகீக &
தெய்வீக மற்ற பர! அம்ச நிலையால்! உன்
பரம் என்ற ஸத்குரு! இடம் பெறுகிறார் என உணர்க.
இப்படி இருநிலைகளில் வைத்து பார்க்கும் போதுதான்
ஸ்ரீபகவான் என்றால் என்ன? ஸ்ரீஸத்குரு என்றால் என்ன?
என்பது உணர முடியும். ஆகவே ஸத்குரு உயர்ந்தவராகும்.
இனி உட் கருத்தை உணர்:

(1) பரம்: செயலற்ற ஒன்று (2) ஸ்ரீபகவான்: பர அம்சம் பெற்ற, செயலுற்ற ஒன்று. கிரியையோன்றவர்.

(3) பந்த ஜீவன்:- இவன் பர அம்ச ஆத்மாவே. ஆனால், அறியாமையான் மனதால் பசையுள்ள குப்பை கூளங்களை சேகரித்து தன்னையறவி, பந்த ஜீவன் என ஆனான். இக்குப்பை கூளங்களை எரித்தால் அன்றி, இவன் ஆத்மா ஆக முடியாது.



ஓர் ஸத்குரு! ௨௬௨

இருப்பில் ஆத்மா.

இயக்கத்தில் ஸ்ரீபகவான்.

ய தா ஸ் தா ன ம்


காலாதீத பர! ஸ்வரூபமாகும் என உணர்க.

(4) ஸ்ரீஸத்குரு :- இவர் பர அம்சமே.

இவர் ஓர் பந்த ஜீவன் போல் வேஷம்! தரித்து வந்து, இறை & குரு கருணையால்! பந்த நிவர்த்தி, செய்தது போல், ஓர் நாடகமாடி, ஆத்மாவாகவும்! ஸ்ரீபகவானாகவும்! பரம் ஆகவும்! இருக்கும் நிலை பெற்ற தன்மையால், இவரை லென்ஸ்! என கொள்ளலாம்.

இனி உண்மையை உணரவும்.

முன்கூறிய பந்த ஜீவனை, ஸ்ரீபகவத் பக்தியை ஊட்டி, சூர்ய ஒளியால், உலர்த்துகிறார் ஸ்ரீஸத்குரு. பின் தாம், லென்ஸாக இருந்து கொண்டு, உலர்ந்த குப்பை கூளங்களை, எரித்து பஸ்பம் ஆக்குகிறார். அதனால் வினைச்சுமைச் சாம்பல் ஆகிறது. பந்த ஜீவனை! ஆத்மாவாக்கி, தம்மோடு கலந்து, ஐக்கியப்படுத்தி, பரத்துடன் கலந்து விடுகிறார். ஆகவே ஸ்ரீபகவான் சகாயத்துடன் ஸ்ரீஸத்குருவைக் கூவுங்கள் என நினைவு செய்கிறேன்.



பந்த ஜீவனின் (263)
சொந்த பந்த
பாச பற்றின் பசைகளை!
ஸ்ரீபகவான் என்ற சூரியனால்
உலர்த்தாமல் ஸத்குரு
என்ற வெள்ளி எரிக்க முடியாது எனவுணர்க

(E)

கேள்வி:- ஸ்ரீபகவானையும்! ஸத்குருவையும்! ஒன்றாக உணரும் நிலை பெறுவதென்றால், அதன் சாதனை என்ன?

பதில்:- அறிவு! வழிகாட்டியது ஸ்ரீபகவான்.
ஞான ஒளி! காட்டி அழைத்தது ஸ்ரீஸத்குரு.

அறிவு வழிகாட்டியது என்பது, ஆரம்ப நிலையில் (ஸ்ரீபகவான்) எம் சிருஷ்டியை, அளவோடு புசி என்றான். (ஸ்ரீஸத்குரு) சர்வார்ப்பணமாக! உணவை உண்டால், உபாதையும் இல்லை. வியாதியும் ஒழியும் என்றார். ஸ்ரீஸத்குரு அருளிய, சர்வார்ப்பணத்தால், யாமே! ஸ்ரீ ப க வா ன் எனஆனேம்.

இதனால் அறிவு வழி! ஞான ஒளியில்! மயமாகி விட்டு, பின் அந்த ஞான ஒளி! பிரம்மார்ப்பணம் என்று, பிரம்மாஸ்திரத்தை தொடுத்து, ம ன தை மாய்த்து (மனம் நீத்தாகி) மனதின் நா ம ரூ ப கற்பனை ஒழிந்து நாசமான தன்மையால், எல்லாம் பரமாகிய மணி ஆன தன்மையால், இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! என சும்மாவே சுகமாகவே இருக்கிறேன். ஆதலே ஸ்ரீபகவானும் ஸ்ரீஸத்குருவும் ஒன்றென்பது ஸத்தியமாகும்.

தி. பாபா.



அந்த ஒன்றே (264)
ஸ்ரீபகவானை
இருந்து கொண்டு,
சர்வார்ப்பணத்தால்!
ஒன்றே வினையை நாசம்
செய்து, வினை சம்பந்த
மனதை! உலகத்தை பக்குவப்படுத்துகிறது
அந்த ஒன்றே! தூயவடிவம்
தாங்கிய ஓர்

ஓர் முக்கிய உணர்வு என்னவென்றால்?
ஸ்ரீபகவானையும்! ஸ்ரீ ஸத்குருவையும்! ஒன்றாக
உணரும் நிலை பெறுவதென்றால்?
இதில் ஓர் ரகஸ்யம் அடங்கி இருக்கிறது.
ஸ்ரீபகவான்:- சூட்சும ரூபம். அவன் நாமமாவோ,
பக்தர்கள் ஏற்றுக் கொள்ளும், ஓர் அக்ஷரம்! ஆகும்.
அந்த அக்ஷரம், ஓர் வடிவத்தோடு
கூடியதாகும். அப்படியானால் ஸ்ரீபகவானின்
நாம ரூபம்! என்பது (நீ எந்த வடிவில் கருதினும்
அந்த வடிவில் தோன்றுவார். (தமக்கென)
சொந்த வடிவம் பெயரில்லாத சுதந்த
மோன சின்மயமாம் ஸதானந்த வடிவமாகும்
அவர் மாயா! சம்பந்தம் கொண்டதால்தான்,
ஸ்ரீபகவான் என ஆகிறார். மாயாசம்பந்தம் நீங்கி
விட்டால், அவர் ஆத்மாவே! அவர் பரமாத்மாவே!
அவர் பரம் பிரம்மமே யாவார். அதேபோல்,




ஸத்குருவாய் (௨65)
இருந்து கொண்டு
நம்முடைய இயல்பான
பிரம்மார்ப்பணத்தால்
உவந்த வினையை முழு
மையாக சாம்பலாக்கி வி
இல்லாமல் மனதாக்கி ஜீவன்
மனதையும் ஸ்ரீ பகவானையும்
முக்தியை! கொடுப்பதால் ஸ்ரீஸத்குருவையும் ஒன்றென உணர்ந்தோம்.

ஸ்ரீஸத்குரு, பஞ்சீகிருதம் பண்ணப்பட்ட
உன் போன்று, ஓர் **தூல** வடிவம் கொண்டவர்.
உன் போன்றே, நாம ரூபம்! கொண்டவர்.

**அவர்! உனக்காகவே!**

(உன் போன்ற பக்குவ ஆன்மாக்களுக்காகவே)
வந்தவராகும். அவர் நாமரூப, ஏக ஜீவ, நிலைக்காகவோ
ஜீவ ரக்ஷிப்புக்காகவோ வரவில்லை! என உணர்க.
ஆனால் அவரும், உன் போன்று **நடித்தால்**
**தான்! மயங்கலில் நீ!** (உன் போன்று)
அவரை நம்ப முடியும். அப்படியானால், அந்த
காலாதீத பரமே! உனக்கும்! உன் போன்றவர்களுக்கும்
பரநிலையை உணர்த்தி, பரத்தோடு ஐக்கியப்படுத்துகிறது
அந்நின்றே உன் **ஸத்குரு**! என உணர்ந்து உன்
ஸ்ரீ பகவானையும் ஸ்ரீஸத்குருவையும்! ஒன்றாக உணர்வாயாக.



நாமரூப ஜக ஜீவ
தோற்றமானது 266
# மனதை
சம்பந்தம் கொண்டதாகும்
மனம் நினைத்தால் ஜகம் உண்டு
மனம் மறந்தால் ஜகம் இல்லையென்று
மனமே எண்ண வடிவமாகவும்; எண்ணங்கள்


ஓர் ஸ்ரீமஹாத்மா! ஓர் கேள்வியை கேட்டார்?
அக்கேள்வியாவது:- ஓங்கள் அன்பான பாபாஜீ!
இவ்வுலக அனைவரும், வினை & விதியைப்பற்றி,
பலவாறாக பேசுகிறார்கள். வாதம் பண்ணுகிறார்கள்
ஆகவே இக்கேள்வியை கேட்கிறோம்.

(1) ஸ்ரீபகவான் பக்திக்கும்! ஆத்ம ஞானத்திற்கும்!
வினை & விதி! இல்லையென்றும், ஆனால் நாமரூப,
ஜக ஜீவ, வாழ்க்கைக்கு! வினை & விதி! உண்டென்றும்;
சொல்வதன், உண்மையின் விளக்கம் என்ன?

(2) அதேபோல், யோக சாதனைக்கும் வினை & விதி
உண்டா? இல்லையா? என்பது பற்றி சிறிது விளக்கவும்?

பதில்:- முதல் கேள்வி:- ஸ்ரீபகவான் பக்திக்கும்
ஆத்ம ஞானத்திற்கும்! விதி & வினை உண்டா?
அதேபோல் நாமரூப; ஜக ஜீவ, வாழ்க்கைக்கும்
வினை&விதி உண்டா?

பதில்:- நாமரூப, ஜக ஜீவ, வாழ்க்கைக்கு வினை & விதி
உண்டு என்பது, ஸத்தியமேயாகும். காரணம்?



குண சொரூபமாகவும்
இருப்பதால் தான் மனதால்
தோற்றம்! இருப்பு! (267)
மாற்றம்! மறைவு!
என நாமரூப ஜக தோற்றம்
உண்டாகிறது என்பது ஸத்தியமே
ஆகவே மனதால் தோன்றிய வினைக்கே! வினைய
ஆட்டிவைக்கவே விதிக்கவே வேண்டுமென உணர்க.

நாமரூப, ஜக ஜீவ, தோற்றம் என்பது குற்ற
தந்தையின் **மனதால்** | குணங்களால்
தோன்றும் **வினையை** | புண்ணிய பாபத்தை
முக்தாலம் என்ற **விதியால்** | நடத்தி, அதன்
பலனை, ஜனனமரண, சுழற்சியை உண்டென்னும்
நிமித்தம் மனமும் உண்டு. வினையும் உண்டு.
விதியும் உண்டு. என உணர வேண்டும். மேலே
கூறிய மூன்றும் இல்லையானால் நாமரூப ஜக ஜீவ
தோற்ற நிலையில், இவ்வுலகம் இருக்க முடியாது,
இருக்க இயலாது. என்பது ஸத்தியமே.

ஆ ஒ வீ?

ஸ்ரீபகவான் பக்திக்கே! ஆத்ம ஞானத்திற்கே!
**வினை & விதி** | இல்லையென்பது ஸத்தியமே. (முறையே)
காரணம் :- புண்ணிய பாபம்! / கன்மம் ஆணவம் & மண்!
என அறிய வேண்டும். இவை கொண்டே ஏதுநிலை
உயரத்தில் இருந்து, போட்டாலும் அவை **தாழ்** | நோக்கி
ஈர்க்கப்பட்டு, பூமியையே வந்து அடையும்.



புண்ணிய பாவம் (268)
என்றுவே அது
ஜலம் & மண்! என
அறிய வேண்டும். இவை
ஜனன மரண சக்கரம்
இவ்வாறு வினையும்
மனதால் தான் தோன்றும்.
அப்படி தோன்றிய வினைகளை,
விதி என்ற காவல தேவன் (முக்காலமும்)
குறையின்றி விதிகளாச்சாரப்படி நடத்துகிறான்.

மேல்! நோக்கி செல்வாது. இதுவே நியதி.
ஆனால் பக்தி!சம்பந்த அக்கினியானது, எரியும் திரியால்
அதை கீழ் நோக்கி பிடித்தாலும், அந்த அக்கினி
மேல் நோக்கியே எரியும்.
தோற்றும் அக்கினியே, இந்நிலை என்றால்
தோற்று ஞானக்கினியானது, (உணரும் நிலையில் உள்ளது)
வந்ததும் இல்லை. அது மறைவதோ மாறுவதோ இல்லை
அது ஸ்வயம் ஜோதி! அதனை உணர்ந்து.
நெருப்பில் எப்படி பசை! இல்லையோ! எப்படி
இருக்க முடியாதோ! எப்படி இருக்க இயலாதோ!
அப்படியே பக்திக்கும், ஆத்ம ஞானத்திற்கும்,
வினை & விதி பசை இல்லையென்பதே ஸத்தியமாகும்.
மேலும் ஓர் முக்கியம் என்னவென்றால் சொர்க்கம்!
எனச் சொல்லும் ஓர் சோபானமது
இன்ப நுகர்ச்சிக்கு!



மனம்! ௨69
நாமரூப ஜக ஜீவ
தோற்றமாகிய வெளி
நோக்கில்! மட்டும்,
பின்னிப்பிணைந்து வி
யாகுவதால், கர்மாவின்
பற்றுவமாவும் ஸ்திரமாகிறது.
ஆகவே வெளிநோக்கிற்கு மட்டுமே வினை&விதி
தொடரும் என உணரவும். மற்றும்.

**வினை&விதி!** உண்டு என ஞானிகள்
வாயிலாக அறிகிறோம். இந்த சொர்க்கமானது!
**பக்தி**யால் பெறுவதில்லை என உணரவும்.
**தானம் & தர்மம்!** (புண்ணிய) **பலத்தால்!**
பெறக்கூடியது என்று உணரவும். ஆ ஈ வீ?

கைலாயம்! வைகுண்டம்! பிரம்ம லோகம்!
எனச் சொல்லும் **பதி!** முக்திக்கு அவசியம்
வினை விதி! தடையாகும். அங்கு முக்திகளின்
**பக்தியே!** முக்கிய இடம் பெறுகிறது.
இங்கு **சாதுமன முயற்சி!**
அவசியம் தேவைப்படுகிறது. இம்முயற்சி&
முயற்சியால் **மனம்! அறிவு!** என
ஆனால் போதும். இதனை பதமுக்தி! சாலோக்கியமாகும்.



தெய்வீகத்திற்கோ!
பரமார்த்திகத்திற்கோ
மணம்! (276)
இல்லாத தன்மையறல்
வினை! விதி! மனதின்
விளையாட்டு இல்லை எனஉணர்க
தெய்வீகத்திற்கு மட்டுமே தனதுமனமுயற்சி
தேவைப்படுகிறது. பரமார்த்திகத்தில் மனமே
அறிவாகி விடுகிறது.

ஆனால் ஆத்மஞானத்திற்கு **அறிவே!**
**பேரறிவாக!** மாற வேண்டும். இங்கு
மனமும் இல்லை. மனம் தேடிய வினையும் இல்லை!
வினையை நடத்தும் விதியும் தேவ தேவன் என்ற
ஸ்ரீபகவானும் இல்லை என்பதே ஸத்தியம்.
இங்கு தனது மனமுயற்சியும் இல்லை!
என்பதே ஸத்தியம். ஆனால் அறிவே!
பேரறிவாகமாற வேண்டும் என்றால்,
ஸ்ரீஸத்குரு அருளும், பிரம்மார்ப்பணம்!
ஒன்றே! அறிவு! பேரறிவாகும் நிலையாகும்.
ஆகவே நாம ரூப, ஜக ஜீவ, தோற்ற, உலகிற்கு
மட்டுமே, வினை! மனம்! விதி! உண்டு என்பதே ஸத்தியம்
இம் மூன்றையும் வெல்ல தனது மனமுயற்சி தேவை.

பாபா



ஆனால் லௌகீகத்தில் ஆகாமிய வினை (27) நான் எனது என்னைவிடுவதால் ஜீவ ஹிம்சையாட்டு! ஓர் திட்டமிட்டகாரியமாக நடைபெறுவதால், இங்கு தனது மனமுயற்சி தேவை இல்லை.

நம்பனை நாமமே என உணர்த்த ஒன்றே லௌகீக சாதனையாகும்.

(உ)

கேள்வி :- அதேபோல், யோக சாதனைக்கும் வினை & விதி! உண்டா? இல்லையா??

பதில் :- யோகாசனம்! என்றும் யோகசாசனம்! என்றும் இரண்டைப்பற்றி, ஸ்ரீமான்கள் வாயிலாக அறிகிறோம்.

யோகாசனம் என்பது, உடல்பயிற்சி ஆகும்.

யோகசாசனம் என்பது, மூச்சுப்பயிற்சி ஆகும். அதாவது, வாயுவை கும்பகம் பண்ணி! அதாவது வாயுவை மனதால் அடக்கி! (சரீரத்தில் உள்ள 96 தேவர்களையும், எதிர்த்து போராடி ஜயித்து) அஷ்டசித்திகளையும், (ஆத்ம சக்தியால்) பெறுதல் யோக சாசனம் ஆகும். இந்த யோகசாதனையை, பற்றி ஸ்ரீமான்கள்! அனுபவ நிலையில் கூறுவதாவது.

யோகத்தை தொட்டவன் விட்டவன் கெட்டான்.

என்னும் வாக்கியத்தை, ஏன் அப்படி கூறுகிறார்கள் என்றால்?



அதிஷ்டம் என்றால் அது உன் இஷ்டத்திற்கு வராது. அது இஷ்டப்பட்டால், மட்டுமே அது உனக்கு வரும். அதன் பொருள்:- அது உன்மீது இஷ்டம் கொண்டால்

இ

அளவுக்கு கடும் முயற்சி செய்வாயாக. முழுநிறைவு பெறும்வரை யோகத்தை விடாதே.

யோகப் பயிற்சி பண்ணுபவராக இருந்தால், யோகப்பயிற்சியில் **முழுநிறைவு** அனுபவம் பெற்ற, ஸ்ரீமஹானிடம், பயிற்சி செய்ய வேண்டும். அரைகுறை பயிற்சியாளனிடம் பயிற்சியை ஏற்காதே. யோகப்பயிற்சியை, ஆரம்பித்து விட்டாயானால், **முழுநிறைவு** பெறும்வரை, அதை விடாதே. அப்படி விட்டுவிட்டால், அந்த யோகமே உனக்கு காவலாய் முடிந்து விடும். என்பதற்காகவே, அக்கடும் வாசகத்தை, ஸ்ரீமஹான்கள் போட்டார்கள். மேலும் உங்கள் கேள்விக்கு விடை:- **யோகம்** பயிற்சி பெற **யோகம் அதிஷ்டம்** வேண்டும். அதிஷ்டம் வேண்டும் என்றால்?



யோகப்பயிற்சியில்

**மனம் &** (279)

**வாயு!** ஒன்றும்

சேர்ந்து இணைவதாலும்

அசைவே இவ்விரண்டிற்கும்

காரணமாக இருப்பதாலும்

96 தேவர்களையும் இயக்க வேண்டியிருப்பதாலும் இந்த யோகப்பயிற்சி! மனோ கடமை! எனப் பேசப்படுகிறது.

அதிஷ்டம் :- அது + இஷ்டம் = அதிஷ்டம்.

ஆகும் என உணரவும். அதன் உள் அர்த்தமாவது :-

அது இஷ்டப்பட்டால் மட்டும் உன்னிடம் வரும்.

உன் இஷ்டத்திற்கு அது வ ரா து.

ஆகவே இங்கும் **தனமுயற்சி!** அவசியம் தேவைப்படுகிறது.

இக்காரணத்தை கொண்டு, ஸ்ரீமகான்களின் அனுபவ வாக்கியமாவது :- இந்த யோகப்பயிற்சிக்கு **வினை விதி!** யென்கட்டுமில்லையென்றும். **மனதின்!**

கட்டு ஒன்றே (மனம் & வாயு! கட்டு ஒன்றே) முக்கியம்

என்றும். கூறுவதை, ஸ்ரீமகான்கள் வாயிலாக அறிகிறோம். என இதை நினைவு செய்கிறோம்.

இருப்பது ஒன்றே!

நடப்பது நலமே!!

**பாபா.**



படிப்பதிலும்! கேட்பதிலும்!

உ சிரவணம்

சிரத்தை! 274

உள்ளவர்க்கானாகவும் அச்சிரவணத்தில் நம்பிக்கை! உள்ளவர்களாகவும்

மனனம்

ஓம் ஆத்மானந்த குழந்தைகளே!

இந்த ஸ்வயஞானானுபவ நூல்

# ஸ்ரீமத்...ரி.....பு...கீதை!

ஏற்சில முக்கிய இடங்களில், (குறிப்பாக ஸ்ரீமாலயா பிரதேசம்) → முக்கியமான சில ஸ்ரீமஹாத்மாக்கள்! இரண்டு மூன்று என, ஐந்து பேருக்கு! மெய் யோகமலர், அதிசிரத்தையுடன் பாராயணத்தை விட **கருத்து** ரகசியம்! மட்டுமே! ஸத்ஸங்க உரையாடலாக, தெளி நிலை பெறுவதாக தெரிகிறது. மேலும், இங்கு அன்பின் குடியில்! வெளியான அனைத்து மடல்களும்! எல்லோரிடமும்! இருப்பதாக அவர்களுடைய, புழக்க & வழக்க நீதங்களிலிருந்தும்! முக்கிய கேள்விகளிலிருந்தும்



அந்த நம்பிக்கையால்

(275)

நித்ய அப்யாசம்

வைராக்கியம்!

உள்ளவர்களாகவும் இருப்பதற்கு காரணம் அவர்கள் இருக்கும், இடம் அமைப்பும் மட்டுமாகும்.

தெரிய வருகிறது. ஆனால் பாராயணை மும்! செய்கிறார்கள். நம் போன்று நி று த் தி! பாராயணம்! பண்ணுவதில்லை. வாசிப்பது போல் ஏதோ ஓர் பாகத்தில், இரண்டொரு இடத்தில் பாராயணம்! செய்வதாகவும் தெரிகிறது.

ஆனால் ஓர் உண்மை!

பாராயணம் செய்பவர்களோ!

ஸத்ஸங்கம் நடத்துபவர்களோ!

ஸத்ஸங்கத்தில் கலந்து பாடம் கேட்பவர்களோ!

சிரத்தையும்!

சிரத்தையால் நம்பிக்கையும்!!

நம்பிக்கையால் வைராக்கியமும்!!!

உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதே பேருண்மை ஆகும்.



இடம்! இணக்கம்! இயக்கம்! ௨76

காலம் விரயமாகி விட்டதே! என்ற ஆதங்கம்! ஏக்கம் உருக்கம்! இவைகளே அவர்களின் ஜீவன் முக்தியின்! அஸ்திவாரம் ஆகும்.

அவர்களின் அதி ஆழமான கேள்வியின் விளக்கங்களும்! பேரறிவையே ஈர்க்கிறது.

அவர்களில் ஓர் அன்பரின் வாக்கு:-

அன்பும்! அறிவும்! நிறைந்த ஒருவரான, பாபா! ஏ...வ...ரா...யி...ரு...ம்! வாழ...வ...ர...வி...ல்...லை!!

அனைவரும் சாதிக்கவே! வந்தோம்!

ஆனால் ச ப ல ம ன தி ட ம்!

மாட்டிக்கொண்டு திசை! மாறி திரிகிறோம்.

இக்கவியகத்தில், கொஞ்சம் கவனம்! வைத்தால் போதும். அவசியம் ஜீவன்முக்தி உண்டு என்பது சத்தியமே.



அவர்களின் (277) கேள்வியை இதில் தர வில்லை. அதன் பதில் விளக்கத்தை வைத்தே ஆழமான கேள்விகள் அவர்களின் எப்படி இருக்கும் என, உணர வேண்டும்.

மேலும் ஓர் அன்பர்:- அன்பான மாமாஜீ! இப்படி எளிமையான நிலையில்; படித்த உடனும்! கேட்டவுடனும்!! உ ட னே ப சு ம ர த் தா ணி போ ல்! மனதில்! ப தி ந் து! அப்படி பதிந்த தன்மையினால், மனம் மறைந்தாகி! ஜீவன் முக்தி! ஆக்கும் நிலைக்கு. எந்தமஹாத்மாவும் (சாதித்ததை) தாம்! சா தி த் து! அதை போதிக்கவில்லை. மாறாக! நாம் படித்ததை போ தி ப் ப தே! தம்! சா த னை யா க! கொண்டிருக்கிறார்கள். அதனை வீண்! பெருகி! சோதனையும்! வேதனையும்! தான் மிஞ்சுகிறது. ஆனந்தம் அனுபவமும் இல்லை.



உ

44 அத்யாயங்கள் கொண்ட சுமார் 2000 (2 78) பாடல்களையும்; 140 பாடல்களாக! நவமணிகளாக, பொறுக்கி எடுத்து

ஓர் ஸ்ரீமஹாத்மாவின் வாசகம்:— ஓ அறிவின் பாபா! **சிவரகஸ்யம்!** என முக்கியமான ஸ்ரீமஹான்கள்! சொல்ல கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் அந்த சிவரகஸ்யம் தான் எனச் சொல்லும் இந்த ஸ்ரீமத் ரிபுகீதை! ↑ **ஸ்வய ஞானுபவ நாஸ்!!!** என்னும், ரகஸ்யார்த்தத்தை! நாங்கள் வாயிலாக, உணர்ந்து கொண்டோம். இந்த சிவரகஸ்யம்! என்னும் ரிபுகீதையாகிய ஸ்வய ஞானானுபவத்தை! உணர்ந்து அனுபவித்து **அதுவே நாம்/நாமே அது!** என ஆனந்தன்மையில் தான், நாங்களின்



உமக்கு (279)
இல்லை! இல்லை!
நமக்கோ
தொடர்ந்த, ஸ்ரீ வேத
வியாச பகவானுக்கும்!
ஸ்ரீ கண்ணபரமாத்மாவுக்கும்
ஸ்ரீ ரிபு முனி மஹாத்மாவுக்கும் அனந்த கோடி
பாத நமஸ்காரங்களை, தெரிவித்துக் கொள்கிறேன்.

வாக்கில்! இதுவரை, எந்த ஸ்ரீ மஹாத்
மாக்களும் வெளியிடாத, வெளியிடப்படாத,
ப்ரும்மப்ரபஞ்சத்தின்
ஐக்கிய விளையாட்டு தான்!
என, ஸத்தான அறிவரும் உணர்ந்தோம்
உணர முடிகிறது. எந்த ஸ்ரீ மஹாத்மாவும்!
சொல்லாத, சொல்ல முடியாததான, அனேக
ரகஸ்யங்கள், மிக மிக எளிதாகவும்!
வெகு வெகு அருமையாகவும், அற்புதமாகவும்!
அனுபவித்தோம். அதனால் முடிந்தோம்!
சிவரகஸ்யத்தை! இத்தனை எளிமை! இனிமையாக!
உள் ஒளிமாணிக்கங்களாக!
நத்தின சுருக்கமாக, கொடுத்தமைக்கு மிக்க நன்றி என்றோ.



சாதனை! (240)
செய்யும் ஒவ்வொருவரும்
நாம் இந்த நாமரூப
ஜகத்தில் வாழ வாழ்விலே
நாமரூப ஜகத்தை
நாசம் செய்யவே வந்தோம்
எனசாதித்தால்
அதுவே நம் **சாதனை!** அவசியம்
ஜீவன்முக்தி பெறுவதும் இது சத்தியம்.

இப்படி அனேகர்! அனேக நிலையில்!
உணர்வுபூர்வமாக! **உணர்ந்து!**
அனுபவம் பெற்று வருவதாக உணர்கிறோம்.
இனி அவர்கள்! கேட்ட கேள்விகளை, குறிப்
பிடாமல், அவர்கள்! கேள்வியின் கருத்துக்
களை மட்டும்; **பாடலின்!** விளக்கமாக
சுருக்கித் தருகிறோம்.

முதலில் உண்மையின் உணர்வு என்ற
என்ற தலைப்பிலும்;
பின்னர், பாடல் 51ம்!
பாடல் 52ம்! பாடல் 54ம்! (A) (B) (C) என்ற
நிலையில் வரிசைக் கிரமமாகவும்; **உள்
ஆழ்ந்து!** கருத்தாகவும் இருக்கிறது.
ஆகவே **உள் உணர்ந்து!** அனுபவிக்கவும்.





ஓர் உண்மையின் உணர்வு!

இல்லாததை இருப்புடையதைப் போல், காட்டக் கூடியது **மாயா**! ஆகும். அப்படி இருப்புடையதைப் போல், தோற்றுவதை, உண்டு சுவைக்கிறேன் என மயங்குவது, **மனம்**! ஆகும் என உணர்வால் உணர்க.

விளக்கம்?

(A) இல்லாததை, இருப்புடையதைப் போல் காட்டுவது மாயா! ஆகும்.

எல்லாம் மண்மயமாகிய, உபயோகமற்ற பரமாணு, மாயாவின் சம்பந்தத்தால், பிருதிவி! (மண் & மலை (கல்)) ஜலம்! தாவரங்கள்! என்ற தோற்றமும் & இருப்பும்! உடையதான, அசைவற்ற! உபயோகம் அற்ற! **ஜட** சொரூபத்தை மட்டும், உண்டாக்கி, ஓர்



இல்லவே இல்லை. 282


கயிறு தோற்றம்

வரை மேலே சுற்றியவை
தோற்றிக் கொண்டுதான்
இருக்கும். கயிறு கயிறாக
தோற்றி விட்டால்,
அனைத்து நாமம் ரூபமும்!
மறைந்து நாசமாகி விடும்
பாக
ஒன்றில் இரண்டு தோற்றாது. ஒன்றில் வாமல்
மற்றொன்று வர முடியாது. ஒன்றாக உணருபவரை,
துன்பமே. ஒன்றாக உணர்ந்தால் ஆனந்தமே.

தோற்றத்தை | மட்டும் காட்டியது.

மாயாவின்! மகனை, மனம் / தேவை & ஆசை!

ஆசை & தேவை, என்ற நிலையில், தம் இயல்பான
கற்பனையால், நாமரூப | ஜக, ஜீவ,
உறவு / சுற்றம் / நட்பு / பண்டம் / பாண்டம் /
பதார்த்தம் ! என, தோற்றுவித்துக் கொண்டு,
நான் & எனது | என்ற அஹங்கார மமகாரக் காரி!
பின்னிப் பிணைந்து, தாரதாரமாக விளையாடுகிறது.
அதை மனம் வசம் / அகப்பட்டோர் மட்டும்
கஷ்டம் / கவலை / துக்கம் / துயரம் / வேதனை / சோதனை /
என்ற துன்பமாக | பாவனை செய்கின்றனர்.
இது மமதைய பாவனையே யன்றி, உண்மையல்ல.
இதை அறிவின் நிலையில், உணர்ந்தால் ஆனந்தமே.



ஒன்றுமற்றென்றும்
மாறுவதை! (243)
கெட்டுப்போவதை
என்றே! அழிந்து
போனது என்றே! சொல்ல
இடம் இல்லை. ஒரு
நாமரூபம் மறைந்து
மற்றொரு நாமரூபம் பெறு
வதை மரணமடைந்தோர்த்தம் அறியாமையினால்
கெட்டுப்போனதை என்றும்! அழிந்து போனதை என்றும் சொல்லுகிறார்கள்.

ஸ்வய ஞானுபவ நூலின் / சிவஸத்திய வாசகங்கள்

(A) ஒருபொருளும் ஒருகாலும் ஜனிக்கவில்லை.
ஒருகாலும் ஜனியாதது இருப்பதெங்கே?
விரிவுறவே ஜனியாததும் மற்றும் யாதும்,
(விதவடைந்து நாசமானதென) விட்டதென, சொல்வதெங்கே?

(B) எப்பொருளாவது எங்கேனும் இருக்குமாகில்,
இது இவ்விதமாய் இப்படி உள்ளது என சொல்ல வேண்டும்?
ஸத்பொருளேயன்றி, ஒருபொருளும் என்றும்,
சிறிதுமில்லாத் தன்மையால் சொல்வதற்கு
அற்பவுமே இடமில்லை. (இது ஸத்தியம்) இங்கு,


(C) பதம்பதமாய் சொல்லியிடும் நாமம் இல்லை.
பதார்த்தமென சொல்லியிடும் உருவம் இல்லை.
விதவிதமாய் விளங்கிய எப்பொருளும் இல்லை.
விரிந்த ஜகத், ஜீவ, பரம் எவையும் இல்லை. காரணம்?
அகண்டபரப்பிரம்ம வடிவான எம்மில்
சொல்லும் & பொருளும் / அனுபவம் இல்லை என்று,
சும்மாவே! சுகமாகவே! இருந்து ஸாக்ஷியாய் எப்போதும் ஜொலிக்கிறேன்.



இதன் காரணம்:-
நாமரூப பற்றே (284)
காரணம் ஆகும்.
அதாவது தமக்கு பிரியமான
ஒன்று, நாம ரூபம் மாறி
மற்றொன்றாய் ஆகும்போது
நாம் விரும்பிய நாம ரூபம்
மறைந்ததால் அதை அழிந்தது என்றும் அது
செத்துப் போனது என்றும் நினைக்கின்றனர்.

மேலே கூறிய மூன்றின் உட்பொருள்:-

(A) எந்த நாம ரூப பொருளாவது, நிரந்தரமாக, சாஸ்வதமாக! மாறாமல்! மறையாமல்! அழியாமல் சிரஞ்சீவியாய்! இருக்கிறதா என கவனித்தால், இல்லை என்பதே ஸத்தியம். எப்படி என்றால், அனைத்தும் ஸ்ஸாம் மண்ணுக்கு அன்னியம் இல்லை. அதாவது, வருவதும்! சிலகாலம் இருப்பதும்! காலக்கிரமத்தில், மாறும் (வேறு நாமரூபம் பெறும்) பின்பு மறையும் (சாம்பலோ! மண்ணோ! தூசியோ) என ஆகும். இவை மூன்றினையும், அணுக்கள்! ஆகும். அணுவே ஆன்மா! ஆன்மாவே பரமான்மா! பரமான்மாவே பரப்பிரம்மம் என்ற நிலையில், சர்வாத்ம ஸ்வரூபம் என, ஆகிவிடுகிறது. அப்படியானால், இருப்பது ஒன்றே என்பது உறுதி ஆகிறது. இரண்டாவது ஒன்றேயுமில்லை.



அநேக நாமரூபங்களும் மண்ணிலேயே, (உ85) தோன்றி மண்ணிலேயே, வினை என்ற காரியத்தால், வினையாடி, அவ்வினையாட்டு முடிந்தவுடன், அம்மண்ணிலேயே மறைந்து மாயமாவதும் திரும்பவும் மற்றொன்றாய் உண்டாவது இயற்கையின் நியதி என அறிக.

அப்படி நாமரூபமாக வந்த பொருள், கெட்டு அழிந்து போனதென, சொல்ல முடியாது. சொல்ல கூடாது. சொல்லவாகாது. நாமரூபமாக வந்த ஒன்று, வேறொரு நாமரூப தோற்றமாக மாறியதே யன்றி, அழியவில்லை. அதேபோல் தாவர ஜம்பந்த உறவுகளும், வினையால் மண்ணில் இருந்தே தோன்றி, அம்மண்ணிலேயே வினைசம்பந்த, ஆட்டத்தை ஆடிக் களித்து, வினையை ஆட்டிக் கழித்து, அந்த நாமரூபம் வந்த காரியம், முடிந்த தன்மையால். அந்த நாமரூபத்தை அது தோன்றிய இடமாகிய மண்ணிலேயே போட்டுவிட்டு. அது ஆடிய நிலையில் சேகரித்த, வினைக்காத அதே மண்ணிலிருந்து, வேறொரு மண்நாமரூபத்தை, தாங்கிக் கொண்டு வந்து ஆடிக் களிக்கிறது. அதனை வினை, ஆட்டிக் கழிக்கின்றது.

ஜீவன்முக்தி என்பது இந்த மனதிற்கே என அறிக.




வினையை வைத்து மனம் ஆடிக் களிக்கிறது. (286)

மனதை வைத்து வினை ஆட்டிக் (வினை) கழிக்கிறது. இங்கு நாமரூப பிடிமானமில்.

இதை உண்மையாக கவனிக்கும் இடத்து,

மனம் தான்! வினைகளை சேர்க்கிறது.

" வினையின்படி தோற்றம் உண்டாக்கியது

" " ஆடிக் களிக்கிறது.


" " (வினையை) ஆட்டிக் கழிக்கிறது.

" மேலும் மேலும் புதிய வினை சேர்க்கிறது.

" அப்புதிய வினைக்காக, வேறொரு தோற்றத்தை உண்டாக்குகிறது.

ஆனால் இத்தனைக்கும், மண்/மண்ணாகவே இருக்கிறது. அம்மண்ணில், எந்த மாற்றமும் இல்லை. மனதின் நடுமாற்றத்தால், மாற்றமும், அம்மாற்றத்தால் ஏமாற்றமும் உண்டாகி(ன்) அந்த ஏமாற்றத்தால், இந்த மனம்/புலம்பி! புலம்பி! அந்த வாக்கு விடையதனால், புண்ணிய பாபம் என்னும், பிறவிச் சுழலில் வீழ்கிறது.

ஆகவே ? மனம்.





நாமரூப தோற்றமென ஒன்று உண்டாகவே இல்லை. அப்படி உண்டானால் தானே, அது கெட்டுப் போனதென, சொல்ல முடியும்? வந்து / இருந்து / மாறி / மறையக்கூடியது உண்டென சொல்லவும் வேண்டாம். அது

அழிந்தது இல்லையென ,, ,, .

B அதன் வாக்கியம், ரொம்ப முக்கியமானது. எந்த பொருளாவது எங்காவது இருந்தால் தானே? இது இப்படி இருக்கிறது என, சொல்ல முடியும்? என்கிறார். உதாரணம்:-


நேற்று மரமாக இருந்தது போல் தோற்றியது, இன்று தானே மாறி விட்டது. மறுநாள் பலகை யாக மாறியது. மறுநாள் மேஜை நாற்காலி யாக மாறியது. மறுநாள் விறகாக



ஸத் என்றால்? (244)
அசையாதது.
ஸித் என்றால்
அசைவை உண்டு
பண்ணக் கூடியது.
சித்தம் என்றால் அசை
யவும்! அசைக்கவும்!
செய்யக் கூடியதாகும். அசைவதையும்
அசைப்பதையும்! ஞானதோஷம் பிண்ணவிக்கும்.

மாறியது. மறுநாள் கரி/சாம்பல்! என
மாறியது. மறுநாள் தூசி! அணு! ஆத்மா!
என மாறிவிட்டது. இது பலமுறை சொல்லிய
சம்பவம் தான். இதன் முக்கியமாவது?

மரமானது எரிந்து சாம்பல் ஆகலாம்.
அல்லது, பட்டுப் போன நிலையில், காலகதியால்
கீழே சாய்ந்து, இற்றுப் போய் கூணித்துப்
போய் மண்ணோடு மண்ணாகி! தூசி ஆகி
மேலே சென்ற நிலையில்
அதுவே ஆத்மா ஆகவும் செய்யலாம்.
அப்படியானால், எந்த பொருளாகிலும், அதன்
கதி இது தான். வேறு வழியும் இல்லை.
வேறுமாற்றமும் இல்லை. வேறு போக்கு
வரவும் இல்லை. இதுவே ஸத்தியம்.
இதன் உண்மை. திரும்பவும் இறந்து
எதுவும் மண்ணிலே தோன்றி மண்ணாகவே ஆகிவிடு
இந்நிகழ்ச்சிக்கு, மனிதன் உட்பட நடப்பன!
பறப்பன! நீந்துவன! ஊர்வன! தாவரங்கள்!
என உலகின், பொருள்கள் எல்லாம் அடங்கும்.




உண்டு என்றால் சூட்சும ஒலி (289) யாவையும் பிரணவம் ஒலித்து உணர்த்தும் பரசொரூபம் ஒன்று ஓங்காரம் போன்றது மற்றும், உன்னை அறி இஃது என்றால் நாமரூபமாக காணும், எப்பொருளும் நாமரூபமாக சொல்லும் தெய்வமும் அதன் உலகங்களும் இல்லவே இல்லையென உணர்க.

உதாரணத்திற்கு, முதலில் கூறியதை மட்டுமே, எடுத்துக் கொள்வோம்.

**மரம்!** சாம்பவாகியோ அழிந்தோ மண்! தூசி! ஆத்மா என ஆமே அதே ,, தானகவும்! பலகை! மேசை! நாற்காலி! மற்றும், உபயோக பொருள்களாகவும் **தானே!** மாறியதா? **மனம்!** (மனதன்) மாற்றியதா? மாற்றமா? என உணர்ந்தால், மரம் மாற வில்லை. மனமே மாற்றியது என தெளிவாகிறது. மனம் ஏன்? அவ்வாறு மாற்றியது என கவனித்தால், ஆசை & தேவை! தேவை & ஆசை! என்ற மனதே என உருகியாகிறது. இப்படி தானே உண்டாக்கியதை உரிமை & உடைமை! பாராட்டுவதால், தோழி ஏக்கங்களும்! அதனால் புண்ணியமாய பழி! அதனால் ஜனன மரணமே! உண்டாகிறது என தெளிவாகிறது! இதில் உணர்வது.

மாயா! ஓர் தோற்றத்தை, மட்டுமே உண்டாக்கியது மனம்! அத் தோற்றத்தில், நாமரூபங்களை தமக்கு தானே, உண்டுபண்ணி, காரசாரமாக விளையாடுகிறது.



ஸத் என்றால் யாம்
யாமாகவே (290)
இருக்கிறோம்
என்ற சூட்சும ஒலி
(பிரணவம்) ஒன்றே
ஸத் ஆகும் என அறிக.
சித் என்றால் அந்த
ஸத்தானது ஓர் தோற்ற
திரை (மண்ணை மட்டும்) எடுத்துக் கொண்டது
அத் தோற்றமாகிய மண்ணே தம் மாயானவை

ஆகவே?

சித் பொருள் தான்! அவ்வாறு ஆனதேயன்றி
ஜகம் என்றோ! ஜீவர்கள் என்றோ! பூதங்கள்
பொருள்கள் என்றோ! தனியே இல்லவே இல்லை!
என ஆணித்தரமாக சொல்கிறார்.
இதில் ஓர் வேடிக்கை என்னவென்றால்?
(மனம்! புத்தி! சித்தம்! மூன்றும் ஒன்றே)
பரமாகிய மண்! ஸத்தாக இருந்த நிலையில்,

**அது! அதுவாகவே!** இருக்கிறது.

என்ற இருப்பின் நிலை ஒன்றே.
மண்ணாகிய ஸத்தே! சித்தாக! மாறும் நிலையில்,
மாயானவை! (ஜீவத்தை) தம்மோடு இணைத்துக்
கொண்டு, தனிமண்! எனத் ஆனது. அப்போது
இந்த ஸத்! சித்! ஆன நிலையில், இருப்பும்!
ஓர் தோற்றமும்! என (மரம்) என தான் தானே
ஆக்கிக் கொண்டதை உணர்வோம்.



(ஐவத்தைந்து) (௨91)
மட்டும்
இணைத்துக் கொண்ட
நிலையில் அது களிமண்
ஆன நிலையே ஸித்
ஆகும். இக்களிமண்
நாம ரூபம் பெறவில்லை
நாமரூபம் பெறத் தக்க
தொரு பொருளாகி விட்டதென உணர்க.

இந்த ஸித்தாகிய களிமண் (மனம்) பலபல
நாமரூபம்! எடுக்கும் நிலையில், சித்தம் (மனம்)
என, தான் தானே ஆனது. ஸித்தே சித்தமானது
இப்படி உணர்ந்த நிலையில், ஸத்தே! ஸித் ஆனது.
ஸித்தே! சித்தம் (மனம்) ஆனது. மனமே நாமரூப
ஜகத் ஜீவ பல பொருள்களையும் உண்டாக்கியது.
அப்படியானால், எல்லாம் ஸத்! (காலத்ரயமாக)
என்பது தெளிவாகிறது.


தோன்றுவது விளக்கம் அதிகமாகவும் அதி
சூட்சுமமாகவும் உள்ளது.

௧ பதம்பதமான! சொல்லும் நாமம் இல்லை.

௨ பதார்த்தம்! என சொல்லும் உருவமும் இல்லை.

௩ விதவிதமாக! (இவ்வாறான் ஒன் இன்றி எப்பொருளும் இல்லை.)

௪ விரிந்த! ஜகத்! ஜீவ! பரமே! இல்லை. (த்வைத ஸம்பவம்)





(1) பதம்பதமாய் சொல்லிவிடும் நாமம் இவ்வி:-

விளக்கம்:- நாமமென்றால் ஒலி! உருவம் என்றால் ஒளி!

அதாவது, காதுகளால் கேட்கக் கூடியது ஒலி ஆகும்.

கண்களால் காணக்கூடியது ஒளி ஆகும்.

ஒலி = சூட்சுமம்! ஒளி = தூலம்! ஒலி = நாமம்
ஒளி = ரூபம்.! ஒலியை கேட்கலாம்! ஒளியை
பார்க்கலாம்! அப்படியானால்?
ஒலி வந்த பிறகுதான். ஒளி வந்தது.
சூட்சுமமான பிரணவ ஓம் ஒலி வந்த பின்தான்!
அவ்வொலி! உணர்த்தும் இருப்பை
யோர் உடைய, உலகம் வந்தது. என உணர வேண்டும்.
உலக இருப்பை! அவ்வொலியே சுட்டிக்காட்டுகிறது எனஅறி.



ஜடம் போலவே 293
உருவம் நின்றால்
ஒலி என்ற ஸப்தத்
தை சொல்லி அழைத்
தால்தான் அந்த
ரூபம் இன்னதென
அறியமுடியும். அப்படியானால்
நாமம் இல்லாமல்
ஒலி ஸப்தமில்லாமல் ரூபம் இருந்தும் அது இல்லாததை உணர்க.


ஆகவேதான் **நாமரூபம்** என்று புகல் நாமாவை
முன் வைத்து, ரூபத்தை பின் வைத்தார்கள் ஞானிகள்.
அப்படியானால், இது எதை உணர்த்துகிறது என்றால்?
நாமம் வந்த பிறகுதான் ரூபம் வந்ததாக தெரிகிறது.
ஆகவே பிரணவத்தின் ஒலியே சிருஷ்டியின் ஆதாரம்.
நாமம் சூட்சுமம்! அது யுகயுகமாக அழியாத ஒன்று
ரூபம் மாறும் மறையும். அது அழியக்கூடிய ஒன்றாகும்.
இதை கருத்துடன் உணர்ந்தால்? உண்மை விளங்கும்.
**அதை**! உண்டு என்றும்; இல்லை என்றும்; சொல்லலாம்.
உண்டு என்றால், அதன் இருப்புத்தன்மையை குறித்து
அது இருக்கிறது என்ற **ஒலி**! உண்டு.
இல்லை என்றால், எந்த தோற்றத்துடனும், எந்த
நாமரூபத்துடனும் **ஒளி**! இல்லை. (உருவம்)
ஆகவே ஒலியின் பின்புதான் ஒளி வந்தது என்பது
சத்தியமே. இந்த ஒலி எப்படி வந்தது என்றால்?



பிரம்மம் தன்னை வெளிப்படுத்த (294) கொள்ளும்போது, தன்னை இருக்கிறோம் என்று பன்மையில் உரைக்கிறது. என்றால் ஓம் என்ற பிரணவத்தை தம்முள் அடக்கி இருக்கும் தன்மையால் தம்மை பன்மை நிலையால், இருக்கிறோம் என வெளிப்படுத்துகிறது.


சாஸ்வதமான அந்த பரமாகிய ஒன்று, தன் இருப்பை, உணர்த்தும் நிமித்தம், தானே தானாகவே, **யாம் இருக்கிறோம்**, என்ற, ஓர் சப்தத்தை! அதாவது ஓர் ஒலியை, அதாவது தம் பிரணவத்தை! **ஒலி** தம் கச்சிதம் செய்து விட்டு நேர்த்திக்காக, உபயோகமற்ற (உதாரணம் உண்மை அல்ல) பாவனை அகண்டமன் ஆகவோ, அகண்ட பிரம்மமான அந்த சமுத்திரமாகவோ! தம்மைத் தானே, தோற்றுவித்துக் கொண்டது. என ஸ்ரீ மஹரிஷிகள் வாயிலாக அறிகிறேம்.

நாமம் ஸ்பரிசத்தால் தான் ரூபம் விளங்க முடியும். நாமம் இல்லாவிடில் ரூபம் இல்லை என அறிக.



சப்தப் பிரபஞ்சம்!
ஆரம்ப நாளே, ௨95
பிரணவம்
ஆத்மாவின் தேவ தெய்வ
நாமாவும்! வேத மந்திர
ஒலியுமாகும். பின்
இக்கலியால் நாமரூப ஜக
ஜீவ சொரூப பந்த ஒலியாக
விட்டதும் அதுவே ஸப்தப்பிரபஞ்சம்! என்பது
அர்த்தப்பிரபஞ்சமாகியின் அனந்த பிரபஞ்சம்
ஆகிவிட்டது என அறிக.

இந்த பிரணவத்தின் (ஓம்) ஒலியே
பரசொரூபம்! என்றும், பரம் பொருள் என்றும்,
பரப்பிரம்மம் என்றும், இன்னமும் பற்பல
நாமம் ஒலியால் சொல்லி ஆதி
ஸ்ரீமஹான்களால் அழைக்கப்படுகிறது! அதனை
இங்கு என்ன உணர்கிறோம் என்றால்?
அது! நம் இருப்பை வெளிப்படுத்தும்
நிமித்தம், யாம் இருக்கிறோம் என்ற ஓர்
ஒலியை (பிரணவத்தை) தொடுத்துக் கொண்டு,
மனவாகவோ! சத்திரமாகவோ! ஓர்
தோற்றம் உண்டாக்கிக் கொண்டதனை
ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.
இதனை உணர்வது, நாமம் (ஒலி) முதலில் என்றும்,
ரூபம் (ஒளி) இரண்டாவது என்றும் உணர்தலே போதும்.



உலகியல் நாமம்:—
உறவு, சுற்றம்,
நட்பு, ஆகிய 296
இன, ஜன, மத,
மேரு நாமமும் (மேரும்)
மற்றும் நடப்பன, ஊர்வன
நீந்துவன, பறப்பன,
மற்றுமுள்ளவை மர்க்கங்கள்! கிருமி கீடகங்கள்,
அனைத்து ஜீவ சொரூபங்களின், நாமம் என்ற பெயர் ஆகும்.

இவ்விளக்கத்தை பார்ப்போம்.

பதம்பதமாக சொல்லியிரும் நாமம் இவ்விதம்—
பதம் என்றால் சொல்லும், சொல்லின் பொருளும்,
என உணர்க. அதாவது, அர்த்த பாவனையாகும்.
பதம்பதமாய் என்றால் பலபல விரிவான விளக்கம்
அதாவது, ஒலி விளக்கத்தை கொடுத்து, பின் அதன்
தோற்றத்தை உருவத்தையும் நிறுவியாகும். இதில்
உலகியல் நாமமும்! தெய்வீக நாமமும்/ அடங்கும்
வெறுமனே நாமம், என்ற ஒலியாகிய, சப்தார்த்தம்
இருந்தால், அறிவு உணரும்! மனம் உணராது.
உரை முடியாது, உணரகியலாது, மனம் கண்டால்
தான் நம்பும். கண்ணால் காணாததை, காண
முடியாததை, மனம் நம்பாது. ஆகவே இங்கு ஓர்
**தோற்றம்** தேவைப்படுகிறது. தோற்றம்
இருந்தால்தான் அதை வைத்து சொந்தம் கொண்டாடி
(உடைமையும் உரிமையோடு) மனதால் விளையாட முடியும். ஆகவே இதன்
அருத்தவரியாவது



நெய்வீக நாமம்:-
தேவ தெய்வங்க (297) ளின் நாமாவும்!
அவர்கள் உலகங்களும்
ஆகிய எல்லா பெயரும்
நாமஓம் அடங்கும்.
இதை உணர்வதாவது:-
நாமத்தின் (பெயரின்) பின்தான் ரூபம் வந்தது
என அறிக.

பதார்த்தம் எனச் சொல்லியரும், உருவம் இல்லை
பதார்த்தம் என்ற சொல், இருந்தபயரும்.

(A) பத | அர்த்தம் : இது தேவ தெய்வ உலகங்களாகிய,
கைலாயம்! வைகுண்டம்! பிரம்ம லோகம்,
என ஏழு உலகங்களை குறிக்கும் இவைகளே,
பத | முக்தி என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

(B) பதார்த்தம் : இது பண்டம் பதார்த்தம் (மண்மய பாண்டம்) என சொல்லும் விளக்கமே ஆகும்.
பண்டம் பதார்த்தம் :- நாம ரூபத்தோடு கூடிய, உண்ணும் பொருள்கள். பதார்த்தம் ஆகும்.
சொல்லும் விளக்கமும்:- ஒலி அமைவது தட்டி அர்த்த பாவனையும், அதன் விளக்கமே ஆகும்.

முந்தையது:- நாமம் | பிந்தையது: ரூபம் | எனவுணர்க.



உண்மையின் (2.98)
உணர்வோடு
நோக்கின்:
எல்லாம்!
மண்ணே!
மண்ணுக்கு அன்னையாம்
நாமரூப ஜட! ஜீவ! சொந்த! பந்த! உறவு! சுற்றம்! நட்பு! என்னும் லீலை.

இதன் உண்மை :- நாமம் இல்லாமல், ரூபம் இல்லை! என்பதே ஸத்யம். அப்படியானால், நாமம் பர! அம்சம் என்னும்! ரூபம் ஜட! அம்சம் என்றும், கொள்ள வேண்டும். பிரணவம் என்ற ஒலியானது, எந்த ரூபத்தையும், ஏற்காத தனித்த ஒன்று ஆகும். அது தோற்றம் மாத்திரமாய் வந்தது என்றால்,


(இது உவமானமேயன்றி உண்மையல்ல)

(A) அகண்டமான பாவன மண்! என்றும் அல்லது,
(B) ,, சமுத்திர ஜலம்! என்றும்,

கொள்ளலாம். அந்த நாமத்தைமட்டும் உடையதான, பிரணவத்தை, ஸ்வயம் ஜோதி என்றும், கொள்ளலாம்.

இந்த பதார்த்தத்தை! பத அர்த்தம் என்றும், பண்ட (உணவு) பாண்ட (பாவ ரூபம்) அர்த்தம் என்றும், பாடலாக்கத்தின், நிமித்தம் கொள்ளலாம்.





இதில் என்னை உணர்ந் தப்படுகிறது என்றும் (299)

நாமம் / பரம் என்றும்.

ரூபம் ஜகம் என்றும்.


நாமரூபம் ஜெனிமேல் பதைதொரு பமேல் என்றும். அதாவது மண்ணை / மாண்டமாக வந்தது என்றும். ஆனவ் நாமரூபம் இன்னவிதமும்

இங்கு மண் என்பதும், ஜீவம் என்பதும். ஓர் வாக்கின் ஒலியே ஆகும். அது இருப்பு / இருக்கிறது என்ற, ஸப்தார்த்தமேயாகும்.

அதே போல், மண் என்பதும், ஜீவம் என்பதும், ஓர் தோன்றும்நிலையில், ஓர் தோற்றம் ஆகும். அது ஓர் வாக்கிய விளக்கம் ஆகும்.

முந்தையது **நாமம்** / பிந்தையது **ரூபம்** / என உணர்க.

ஓர் ஒலியை (ஸப்தத்தை) கொடுத்து, யாம் இப்படியாக இருக்கிறோம், என ஓர் தோற்றத்தை / அதாவது ரூபத்தை எடுத்துக் கொண்டது. இதை வைத்து நாமம் முந்தையது என்றும் ரூபம் பிந்தையது என்றும், கொள்ளலாம். அவன் / அவள் / என்றும், இவன் / இவள் / என்றும். அது / இது / என்றும். ஒன்றை இன்னார் / இன்னது / என, அறிமுகப்படுத்துவது எல்லாம், ஒலியை (ஸப்தத்தை) கொடுத்து அதாவது ஓர் நாமம் கொடுத்து பின் ரூப இருப்பின் தோற்றத் தொடர்பதே ஜகத்தின், வழக்கும் விளக்கமும் ஆகும்.




மன உடைமை & உரிமை

நோக்கு 300

குணங்கள் ஐயம்; இவைகள் அஹங்கார மமகாரத்தினால் விளைந்து என்னும்; உணர்ந்து அறிவில்

நான் எனது! தெளிந்தால் போதும் ஜீவன் முக்தியே! நிச்சயம்.

இதை வைத்து, என்ன உணர்கிறோம் என்றால்,
நாமம் என்றால் சூட்சமம் ஆகும். ரூபம் என்றால் தூலம் ஆகும்.
சூட்சமம் மேல் நோக்கி சென்று, பரத்தை அடைகிறது.
தூலம் கீழ் நோக்கி சென்று, ஜகத்தை அடைகிறது.
இந்த சூட்சம & தூலங்களே! அதன் நிழலாகிய,
மாயாவும் & மனமும்! பின்னிப் பிணைந்து, கோடானு
கோடி, நாம ரூபம்! பெருக்கச் செய்கிறது. அது
ஜகத் ஜீவ, சொந்த பந்த, உறவு சுற்றமென!
பேசப்படுகிறது. இப்படி பேசுவதும் மனமே.
அதை உண்டு என நம்புவதும் மனமே. அம்
மனதையே, அறிவாக்கி! அதை இல்லவே இல்லையென
உறுதி செய்து. எல்லாம் பிரணவ ஸப்தத்தின்!
ஓசையே என்றும்; எல்லாம் பிரணவ ஸப்தத்தின்
விளக்க முன்னே! என்றும்; விகார & விவகாரம்!
எல்லாம் மனமய பிராந்தி! மயக்கமே என்றும்;
ஸத்தியமாக உணர்ந்தால் போதும்.




ஜீவ மயக்கம்:- (30)

காண்பது! கேட்பது!
சுவைப்பது! அநுபவிப்பது
பேசுவது! இவைநான்கும்
மாயாவின் தோற்றத்
திலிருந்து இம்மயமானது

விதவிதமாக விளங்கிடும் எப்பொருளும் இவ்வி
விரிந்த, ஜக, ஜீவ, பரம், எவையுமிவ்வே.


விளக்கம்:- விதவிதம் & நகநகம்! என்பது

விதவிதம்:- பலவித வண்ண வண்ண மாயா
ஜாலமாக! தோன்றுவது, விதவிதமாகும்.

நகநகம்:- ஒன்றே பல நகமாக தோற்றுவதாகும்

உதாரணம்:- மாம்பழங்களை எடுத்து கொண்டால்
நகநகமாக பல விதம் உண்டு. இதைப் போல்
அனைத்திலும், ஒன்றே பல நகமாய்த் தோன்றுவ
தாகும்.

இப்படியாகக் கூறும், அனைத்து பொருள்களும்;
**மனதின் போதை** கற்பனையாகும்.
இங்கு கூறும் அனைத்தையும், (ஏவ் வாம்)
**மண்!** என உணர்ந்தாலல்லாது, இப்போதை
மயக்கம்! ஒழியாது. என்பதே ஸ்ரீ மஹான்களின்
அநுபவ வாக்காகும்.



இவைகளை நாமரூபமாக
காணாமல் ஓம்
எல்லாம் மண்ணே!
மண்ணுக்கன்னியம்
ஏதுமில்லை! என்ற
திட உணர்வை பெறுவதே
அம்மரணமில்லை நாசம்
செய்வதாகும். அம்மண்ணே (பரமே)
நாமென உணர்வதே ஜீவன்முக்தியாகும்.

ஆகவே, பரந்து விரிந்து காணும் விதவித
ரகரக (மாத), தோற்றும் ஐ ஜக ஜீவ
தோற்றம் அனைத்தும், மண்ணுக்கு (பரத்திற்கு)
அன்னியமில்லை. அவை நமக்கு அன்னியமில்லை
என உணர்வாயாக. மேலும் அவர்களும் வாசகம்:-
சொல் பொருள் ஓர் அனுபவமில்லை என்கிறார்.
சொல்லும் பொருளுமற்று! வேண்டாத
செயலும் அற்று! சும்மா இருப்பதே சுகம்!
என்கிறார். இதன் கருத்தை உணர்க.
சொல்லும் பொருளுமற்று என்றால், ஓர்நிலையில்
சொல் என்பது, வாக்காகவும்! பொருள் என்றால்
அவ்வாக்கின் அர்த்தபாவனை என கொள்க.
மற்றோர்நிலையில், சொல் என்பது ஒலி!
என்ற சப்தார்த்தம் ஆகும். இது சூட்சுமம் ஆகும்.
பொருள் என்பது ஒளி! என்ற நிலையில்
காட்சிப் பொருளாகும். இது தூல நிலையில்



உ

வேண்டாச் செயல்
என கூறும் போது (303)
இம்மனதின் நாமரூப
கற்பனையில் மறைமயாந்
தியதன்மையால்
பேதாதி பேதமும்!
அதனால் ராகத்வேஷங்களும்!
அதனால் குற்றம் குறை உணர்வுகளும்


ரூபம் ஆகும்• முந்தையது நாமம் ஆகும்

அப்படியானால், சொல்லும் நிலையில் அமையும், சூட்சும நாமம் அழிந்தால்தான், அதனால் விளங்கும் துலங்கும்! தூல ரூபம் அழிய மார்க்கம் உண்டு என, உணரவேண்டும். இதனைதான் ஸ்ரீமஹான்கள் மௌனம் கவசநாஸ்தி! என்றார்கள் போலும்?

மேலும் இவ்விரண்டினால், நாம ரூபத்தால் விளைந்தே, வேண்டாத செயலாகிய கர்மா! ஆகும்

ஆகவேதான் வேண்டாச் செயலுமற்று, சும்மா இருப்பதுவே, சுகம் என்றார்கள் போலும்?

இதன் உட்கருத்தாவது :- உன்கண்களுக்கு, ஸத்தியமாகவும்! ஸாஸ்வதமாகவும்! இயல்பாகவும்! தெரிவது, ஓர் தோற்றமே. இதுவே ஸத்தியம். எப்படி ஓர் கயிற்றால், சர்ப்பமும்! மாலையும்! தடியும்! ஓர் வெடிப்பும்! இப்படி பலபல விதரூபம் உன் மனமிரட்சியால், தோற்றியதோ,



இயல்பாக உண்டாவது போல் உண்டாகி ஓம் இன்ப துன்பமாகிய புண்ணிய பாபமும்! அன்பை ஞானமும் மோனமும் இந்த மனம் உண்டாக்கியதே அதன் வேண்டாத செயலாகும். எல்லாம் மண்ணே என உணர்ந்து விட்டால் அம் மனச் செயல் நாசமாகும் என அறி.

அதே நிலையில் தோன்றும் போது, தோன்றிய அவ்வொன்றே / பலபல நாமமும் ரூபமும்! தோன்றுகிறதேயன்றி, அவை உண்மை அல்ல! என்பதே சத்தியமாகும்.

அப்படியானால்?

இருப்பது ஒன்றே! அது பரசொரூபமே.

அதுவே மனமய பிரகிருதியின், பிராந்தி மயக்கத்தால் நானாவித, நாமரூப, ஜகஜீவ, தோற்றம் ஆகிவிட்டது. அப்படி ஆக்கிய தன்மையால் தான், அவைகளை பிறியாரும் நிஜமாக, நான்! எனது! பாவனை செய்து, உரிமை & உடைமை! என்ற நிலையில்; தேவை & ஆசை! ஆசை & தேவை! என தாரசாரமாக, இந்த மனமே பிரியாதிருக்கிறது என உணர்ந்தால் போதும். ஜகஜீவமயக்கம் அடியோடு நாசமாகும். அப்பொழுது எல்லாம் மண்ணே (பரமே) அது நாமே! நாமே அது! என சும்மாவே சுகமாகவே இருக்கலாம்.

பாபா





ஜீவநிலை என்பது மனதால் பின்னிப் பிணைந்து ஒன்றுகும். புண்ணிய பாபமும், அதனால் இன்ப துன்பமும், அதனால் ஜனன மரணமும், பின்னல் கொண்டு ஒன்றுகும்.


# ஜீவநிலை | சநிலை | பரநிலை

1 ஜீவநிலை :- இது மனதை ஆதிக்க நிலை. இது ஆத்மாவை மனத்திரை மூடிய நிலை. மனத்திரை மூடிய தன்மையினால், ஆத்மாவை இல்ல இல்ல, மனதை ஜீவன் என்று சொல்லும் நிலை. இது அறியாமையின், அதாவது கவனக் குறைவினால், உண்டாகும்; உறக்க இல்ல இல்ல மயக்க நிலை. நாமரூப, சொந்த, பந்த, பாச பிணைப்பின் நிலை. புண்ணிய பாபத்தின் இன்ப துன்ப நிலை. முக்குண தோஷ பிணைப்பின் நிலை. தனி தோஷ குண இணைப்பின் நிலை. இனம், மொழி, மதம், நாடு, இவைகளில், பின்னிப் பிணைந்த நிலை. விருப்பு வெறுப்பால், பின்னவான நிலை. குற்றம் குறை தோஷம் நிறைந்த நிலை. பேதாபேதம் நிறைந்த நிலை. நான் எனது விடாத நிலையால் அஹங்கார, அதிகார, ஆதிக்க அபிமானத்தால்




உச்சநிலையது அறிவு! (306)
சொரூபமானதும்
இது ஆன்மாவும்
மாயாவும்!
இணைந்து கலந்த ஒன்றாகும்.
இது ஏக (லக்ஷண குணத்தோடு) கூடிய ஒன்றாகும்.

உடைமை & உரிமை யோடு போராடும் நிலை.
ஆத்திரம்! அவசரம்! வேகம்! படபடப்பு!
இவைகளால், உணர்ச்சியால் கெட்டு,
தடுமாறும் நிலையாகும். பட்டம் பதவிகளுக்கு,
போட்டிபொறாமை! கொண்டு, வீண் அலைதலையே
தேடிக் கொள்ளும் நிலையாகும். இன்னமும்,
பக்கம் பக்கமாக, எழுதிக் கொண்டே போகலாம்.
மொத்தத்தில், ஜீவநிலை என்றால், நான் என்கிற
புண்ணியபாவமும்! புண்ணியபாவத்தால் ஜனன
மரணமும்! அனுபவிக்கும் காட்சி! நிலையாகும்
இது துவைத! நிலையாகும். தாஸ! அவஸ்தை
தொடர்ந்து பிடிக்கும் நிலையாகும். மன! எழுச்சியால்
உண்டாகும் சுற்றத்தை! கற்பனை ஆகும்
நாமரூப! மனத்திரையே, ஜீவன்! ஆகும்.
என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.



௩ பரநிலை என்பது: எந்த தர்மா, தர்மமும்! இல்லாத ஒன்றுக்கும் தெய்வீக இறை நிலையும் அதன் சத்திய தர்மமும் இல்லாத ஒன்றாகும். அது நிர்குணமாக இருப்பதால் பேரானந்தமும் கடந்த ஒன்றான பிரம்மானந்தத்தோடு அடியதாகும்

௨ ஈசநிலை:- இது அறிவின்! நிலையாகும். இது ஆன்மாவானது, ஸ்ரீபகவானுக்கு, மாயாவை! தாம் பற்றிய நிலையாகும். இது காட்சியில் மயங்காத, காணும் நிலையாகும். சத்திய வாக்கும், தர்மச் செயலும் உடையதாகும். "சத்வ குணம் என்னும் ஏககுணத்தை" சத்திய தர்மத்தை! பற்றிய தன்மையால், புண்ணிய பாவம் என்ற, வினைசம்பந்தம் இல்லாததாகும். மனித இனத்தை மட்டும், தம் அம்சமாக கருதும் நிலையாகும். மற்றும் அனைத்து ஜீவ கோடிகளையும், தம் அங்கமாக கருதும் நிலையாகும். விருப்பு வெறுப்பற்ற நிலையில் அன்பால் அனைத்தையும், தன்னுள் சேர்க்கும் நிலையாகும். முள்ளை முள்ளால் எடுப்பது போல், கலி தோஷ குணங்களை! அக்குணங்களாலேயே அகற்றும் நிலையாகும்.




ஈசுநிலை என்பது [illegible]
ஜீவனுக்கு
ஆதாரமாகவும்!
ஆதரவாகவும்!
ஆகாரமாகவும்!
ஜீவ ரகசியத்தின் நிலை
யாவும் அமைந்த ஓர் கருணை நிலையாகும்.

பட்டம், பதவி, கௌரவம், பணம், இவைகளின்
பாதத்தை | பொறுமை & பணிவென்ற
கல்வியால் | அணு அணுவாக இணைந்து
உள்ஆழ்த்தும் | நிலையாகும்.

உடல், உள்ள, உணர்ச்சிகள், மேலோங்கும் போது,
அன்பு, அமைதி, பக்தி, ஆனந்தம், இவைகளை
ஊட்டி, மெய் | உண்மை மேலோங்கச்
செய்வதாகும்.

மொத்தத்தில், ஈசன் நிலை என்றால்; சத்திய
தர்ம சொரூபனை, ஸ்ரீபகவானின் சாட்சி ஆகும்.
அது விஷிஷ்டாத்வைத, ஆனந்த நிலையாகும்.
தூய இன்பதுன்பம் இழந்த, பேரானந்த நிலையாகும்.
மனமே அறிவான | நிலையாகும். இந்த
குடும்ப நாமரூப | மயக்க நிலையாகும்.




இங்கு ஈசன் [illegible] நிலை என்ற சக்தியில் நிலைத்து நின்று விட்டால் போதும். பொறுமை! அமைதி! சாந்தி! ஆனந்தம்! பெற்று விடலாம்.

இன்ப துன்பம் மறையும் என ஏக குணத்தை ஜீவன் முக்தி இல்லை

இங்கு மனம், இல்லாத தன்மையால், வினையின் நெருக்கம் இல்லாதான். ஆனாலும் பழவினையாகிய **சஞ்சிதம்**! அழியாமல், இவன் **மறு** ஜன்மாவுக்கு, அனுகூலமாக இருக்கும். இது அறிவே **ஆன்மா**! ஆகி! நாம் மாயாவை பற்றிய நிலையால், ஸ்ரீபகவான் ஆன நிலையாகும்; என ஸ்ரீ மஹான்கள் சொல்வர். இதுவே ஈசன் நிலையாகும்.

③ பரநிலை :- இது பேரறிவின் நிலையாகும். இது ஆத்மாவே! பரமாத்மா! ஆன நிலையாகும்.

குறிப்பு :- ஆன்மா = குடஜலம் / பரமாத்மா = ஏரி பரை ஜலம், தோற்ற பேதம் உண்டு இருந்தாலும் இருப்பில் எந்த பேதமும் இல்லை. இங்கு அறிவே, பேரறிவாக மாறி விடுவதால், கர்மம் இல்லை.



பரப்பிரம்மானந்தம்
என்பது ஓர் ௩10
கரையற்ற
ச மு த் தி ர ம்
அச்சமுத்திர ஜலத்தி
ஓர் கொப்பரை ஜலம்
பரமாத்மா ஆகும். ஓர் குடஜலம் ஆத்மா ஆகும்
ஓர் துளிர ஜலம் நம்முடைய ஜீவாத்மா ஆகும்.

பரமாத்மா என்பது

இது சர்வ சாட்சி நிலையாகும். தூலநாமரூபமோ
சூட்சும நாமரூபமோ! இல்லாத சைதன்யம் ஆகும்.
ஆனால் அகண்டப் பேரொளி அல்ல. இது
கண்டப் பேரொளி ஆகும். இது பிரம்மாண்ட
பாவனையாகும். அகண்டாண்ட பாவனையல்ல.
எக்குணமும் இல்லாத, நிர்க்குணம் ஆகும்.
லௌகீக கர்மமோ! தெய்வீக கர்மமோ!
இங்கு இல்லை. இது ஸ்ரீபகவான் ஸ்தானமல்ல.
இது ஸத்குரு ஸ்தானமாகும். இங்கு போத
மாயா சக்திகும்! ஸ்ரீபகவானுக்கும் இடம் இல்லை.
யோகமாயாவும் **பரமும்**! இணைந்த நிலை
ஆகும்.
லௌகீக & தெய்வீக! எந்த கர்மாவும், எந்த
தேவதெய்வ, நாமரூபங்களும்! இல்லாத தாகும்.



உ காலாதீத பரசொரூபமே ஓர் குட்டி ஜீவம் ஓ!! ஆகவும்; மாயாவை பற்றிய நிலையால் ஸ்ரீபகவான் என ஆகிறது. அதே பரசொரூபமே ஓர் ஜீவா ஜீவம் ஆகவும்; மனதால்! பற்றப் பட்டு சொந்த!

சாட்சி நிலைக்கும்! சர்வசாட்சி நிலைக்கும்! முறையே, **ஆன்மா/பரமான்மா!**

என ஸ்ரீமஹான்கள் சொல்வர் இதன் விளக்கமாவது?

(A) ஆன்மா தனிமரம்! பரமான்மா தோப்பு.


(B) ,, ஒருபழம்! ,, மொத்தபழங்கள்

(C) ,, ஒரு ஆடு! ,, ஆட்டு மந்தை!

(D) ,, ஒருமனிதன்! ,, மனிதர்களின் சந்தை!

(E) ,, ஒருபறவை! ,, பலபறவைகளின் கூட்டம்!


இதை ஒருமை என்றும்; பன்மை என்றும் சொல்லலாம்.



பந்த பாசத்தில் ஒரு உடைமை & உரிமை என சிக்கல் பட்ட நிலையில் அதே ஜீவாத்மா என ஆகிறது
மனதை விட்ட நிலையிலும் ,, ,,
மாயானவை
இவ்விரண்டும் பரசொரூபமே என அறிக.

ஆகவே ஆன்மா! பரமான்மாக்களில்!
**பேதம்!** காண வாகது! என ஸ்ரீ மஹான்கள் சொல்வர். அதேபோல், சஞ்சல நிலையும்! பர நிலையும்! ஒப்பிட்டு பார்க்கும் போது,
**மாயானை!** பற்றிய கால், சஞ்சல என்றும், (சஞ்சல மாயா பற்ற விலகி என்பதே உண்மை) மாயாவும் அவன் மகன்! மனம்! இவ்வாத நிலையே, பரம் என்றும் உரை வேண்டும்.

**பர** சொரூப ஸ்திதி:- இது அகண்டமே போல், ஆகும். இது அகண்டானந்த சமுத்திரம் ஆகும்.
நாம் **அதுவாகவே!** இருக்கிறோம்.
விசிஷ்டாத்வைத! பேதமும் இல்லாமல் ஸ்வயமாகவே இருக்கிறோம்! என்ற ஒரு இருப்புத் தன்மையோடு
அடி



பிரம்மானந்த (313)
சமுத்திரமாகவே
இருக்கும் ஒரு
சகஜ ஞானி
உலகமோ! ஜீவர்களோ
குணசம்பந்தத்தால்
அவனை நெருங்கும் போது,
அவன் ஒதுங்குவானேயன்றி அவைகளை ஒதுக்கான்.


நமக்கு அன்னியமாய் ஏதும்/எவரும்/
இல்லாத தன்மயானந்த/சொரூபமாவான்.

இதன் ஓர் சிறிய விளக்கம் :-

காலாதீத பரசொரூபத்திற்கு, சமுத்திரமே!
ஓர் உவமானம்/ ஆகும் உண்மையிலே.

(A) சமுத்திரம்! எந்த நாமரூபத்தையும்!
குப்பை கூளங்கள்! அணுப்பிரமாணமும் இருந்தாலும்
தம்மோடு சேர்த்துக் கொள்ளாது. தம் அலையால்
மெல்ல மெல்ல, தட்டி தட்டி கரையில் ஒதுக்கிவிடும்
தன்மையாய்! தனித்தே இருக்கும்.

(B) மழைமேகம் போல் பனி உருகியோ/பெரு
வெள்ளமானது, பிரளயம் போல் பொங்கி வந்தாலும்



காரணம்? ஓம்
அவனிடம்
மனம் இல்லை.
அவன் அறிவாகவே
இருப்பதால் பேதமும்
பேத உணர்ச்சிகளும்
அவனிடம் இருக்காது.

# மெய் உணர்வு

ஒன்றே அவனிடம்
இருக்கும் எனவுணர்.

எதிர்ப்பதும் இல்லை. மறுப்பதும் இல்லை.
தாம் விலகி வழிவிட்டு **அன்போடு!**
உள்ளே செல்ல, அனுமதி கொடுத்து, பின்
கோழிக்குஞ்சை, தாய்க்கோழி தம் சிறகின்
உள்ளே வைத்து பாதுகாப்பது போல்
தம் **சுத்த** ஜலத்தை! **உப்பு** ஜலத்தால்
மூடிக் கொண்டு; இறுதி காலத்திற்குள்
**தன்** (உப்பு ஜலமாக) **மேனி** ஆக்கி விடும்.

தான் மாறுவதில்லை. தன்னுடன் சேர்வதை எம்
பேதமும் இன்றி தன்னோடு, சேர்த்துக் கொள்ளும்.
சமுத்திரம் **தாய் தந்தை!** இருக்கும்.
தனக்கென்று எதுவும் இல்லாதது. தம்மிடம் வருப
வைகயும் தம்முடன், சேர்த்து தமதாகவே இருக்கும்.



ஓர் சகஜ ஞானியும்!
நாம ரூப ஜகஜீவ (315)
தோற்றங்களுக்கு
உதவமாட்டான்
உதவ முடியாது! இயலாது.
வந்து! இருந்து! மாறி! மறையும்
**நாமரூபத்தை!** தம் அ வே த


ⓒ அந்த பிரம்மானந்த சமுத்திரத்திற்கு!
ஸ்ரீமஹான்கள் கொடுக்கும், ஓர் உவமான நாமம்:-

# உதவாக்கரை! ஆகும்.

① அது எதற்கும் உதவாத ஒன்றாகும்.
② அது அனைத்திற்கும், உதவ அக்கறையோடு,
கூடிய ஒன்றாகும் என்பார்கள்.

① அதால் **தனித்த!** நிலையில் உபயோகமில்லை.
② அது **இல்லாமல்!** எந்த நாமரூபமும் இல்லை.
எந்த நாமரூபமும்! உண்டாக முடியாது.

① உப்பு அதன் ஸ்வபாவமாக இருப்பதால் அதை
பருகவோ! பயிருக்கோ! உதவாத ஒன்றாகும்.
② அது உப்பாகவே இருந்தாலும், அது இல்லாமல்;
மழை இல்லை! அருவி நதி இல்லை! ஏரி குளம் இல்லை
இவைகள் மூலமாக, நாம் பருகவோ! பயிரிடவோ!



திருவடியினைத் 316
நாசம் செய்து
விட்டு அனைத்தை
யும்! தம்மோடு
ஐக்கியப் படுத்தியும்
நாடியில் உதவ
அக்கறையாக!
இருப்பான் என்பது ஸ்ரீமஹான்களின் அனுபவமாகும்.

உயிர் நாடியாக, இருந்து கொண்டு, அனைத்து
ஜீவ! கோடிகளுக்குமே! நாமரூபங்களுக்குமே!
உதவ அக்கறையோடு கூடிய ஒன்றுமே.
நான்! நிலையில், உண்டு என்ற, இருமையையும்!
சமுத்திரம் என்ற தோற்றத்தையும் மட்டுமே!
தாமே ஏற்றுக் கொண்டு, வேறு எங்கு நாமரூபமும்!
நம்மைச் சாரா ஒன்றுமே.
அனைவ் உலக நிலையில், அனைத்து ஜீவ கோடிகளுக்குமே!
ஆதாரம்! ஆதரவு! ஆகாரம்! ஆகிய
மூன்று நிலைகளாயும். உலகின் அனைத்து
நாமரூப! தோற்றங்களுக்குமே தாமே!
ஆதாரமும்! ஆதரவும்! ஆகாரமாயுமே!
அமைந்த உதவ அக்கறையோடு
கூடிய ஒன்றுமே.



அந்த காலத்தே ஒன்றே ஆ!
ஈச நிலையால்
இறை கருணையாக
வினைபரிபாகம்
பண்ணிய நிலையில்

உ

வினையை! உவர்க்கே அதை பக்குவம் படுத்துகிறது.

அதன்! நிலையில் அது உதவ முடியாது தான்

அதுவே மற்றொன்றாய்! ஆன நிலையில்,

அது உதவ முடியுமே?
இங்கு உதவி ஏன்? எதற்கு?

தேவைப்படுகிறது என்றால்? மன! மிரட்சியே

காரணம் ஆகும்.

இந்த மனமிரட்சி! எப்படி ஏற்பட்டது என்றால்?

ஜக! வாஸ பழக்க (பேச்சு) (செய்கை) பழக்கத்தாலாகும்.

நெடுநாள் (நெடுங்காலப்) பழக்கம் சிலநாளில்

போகாது தான். ஆனாலும், இக்கலியுகத்தில்,

சர்வார்ப்பணம்! என்ற பரிபூரண சரணாகதியே!

உரியமார்க்கம் என்று, ஸ்ரீ குருதேவரால்

உணர்த்தப்படுகிறோம்.



அந்த காவாதே ஒன்றே 318 ஒரு குரு நிஜயாய் பராகருணையாக இருந்து அவித்யையை எரித்தும் வினையை சேர்க்கும் மனதை மாய்த்தும் உதவக்கூடிய ஜீவனாக இருக்கிறது. என உணர்ந்தால் போதும்.

உதவாக்கரையாக! இருக்கும், அந்த காவாதீத பரசொரூபமே! மன (மரண) வலையில்! மாட்டி இருக்கும் ஒருவனை, மீட்டும் நிஜயால் தானமே இறங்கி வந்த நிஜயால், ஸ்ரீ பகவானைக் வினைகா பரியாகம் பண்ணுகிறது. அந்த ஒன்றே ஸத்குருவாக! வந்து மன! பரியாகம் பண்ணி, மனதால் வினைகளை நாசம் செய்து. அறிவால் மனதை நாசம் செய்து, பேறறிவாக! ஜீவன்முக்தியை அருளும் நிஜயால் உதவ அக்கரையாக! இருக்கிறது! எனமட்டும் உணர்ந்தால் போதும்.

இருபத்து ஒன்றே நடப்பது நவமே.

குரு பாபா.




Abode of Love

You Are Everything!